2020 மார்ச் 17]

113—

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம்

***54253—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்தி வேலூர் தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மாடகாசம்பட்டி ஊராட்சி, எம். ராசாம்பாளையத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும் வணங்கி, எனது பதிலை அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மாடகாசம்பட்டி ஊராட்சி, எம். ராசாம்பாளையத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதும் இல்லாத காரணத்தினால், புதிய கட்டடம் கட்ட தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். பரமத்தி வேலூர் தொகுதிக்குட்பட்ட மோகனூர் ஒன்றியம், மாடகாசம்பட்டி ஊராட்சி, எம். ராசாம்பாளையத்தில் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சுமார் 250 உறுப்பினர்களைக் கொண்ட சங்கமாகும். இச்சங்கம், 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 46 ஆண்டுகளுக்கு மேலாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. தினமும் காலை, மாலை என இருவேளைகளிலும் 300 லிட்டருக்குமேல்

பாலை supply செய்து வருகின்ற சங்கமாகும். சிறப்பாகச் செயல்பட்டு வரும் இச்சங்கம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்ற காரணத்தினால், இச்சங்கத்திற்கு பால் வளத் துறைமூலம் புதிதாக கட்டடம் கட்ட அரசு முன்வர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் தொகுதி, மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மாடகாசம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட எம். ராசாம்பாளையத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கமானது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், 16–11–1974 முதல் செயல்பட்டு வருகின்றது. இச்சங்கம் தனியார் வாடகைக் கட்டடத்தில் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வாடகையில் இயங்கி வருகிறது. இச்சங்கத்தில் தற்போது மொத்தம் 251 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 40 உறுப்பினர்கள் நாளொன்றுக்கு சராசரியாக 270 லிட்டர் பாலை கொள்முதல் செய்து, நாமக்கல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பி வருகின்றனர். இச்சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக சொந்த காலி மனையோ, நிலமோ இல்லை. இச்சங்கத்தில் 2017–2018 ஆம் ஆண்டின் இறுதி தணிக்கையின்படி 1,20,670 ரூபாய் கட்டட நிதி உள்ளது. மேலும், இச்சங்கம் 50,470 ரூபாய் இலாபத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட மாவட்ட நிருவாகத்திடமிருந்து நிலம் பெற்றுத்தரும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பால் வளத் துறையின்மூலம் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

திரு. கே.எஸ். மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அங்கு தேவையான இடம் இருக்கிறது. எனவே, அந்த இடத்தில்

2020 மார்ச் 17]

கட்டடம் கட்டித் தரவும், அதேபோன்று தமிழகம் முழுவதும் மிகச் சிறப்பாகவும், நல்ல முறையிலும் செயல்பட்டு வரக்கூடிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைத் தேர்ந்தெடுத்து, விதிமுறைகளை உருவாக்கி, சிறப்புத் தொகையை ஒதுக்கி, பால் வளத் துறையின்மூலம் கட்டடங்கள் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ராசாம்பாளையத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற இடத்தைச் சொல்கிறார். அது 20-க்கு 20 உள்ள இடம். அந்த இடம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் கட்டுவதற்கு உகந்த இடம் அல்ல என நிருவாக ரீதியாக தகவல் வந்திருக்கின்ற காரணத்தினால், அதற்கு மாற்று இடம் பார்த்து, அந்த இடத்தை ஒதுக்கித் தரும்பட்சத்தில், பால் வளத் துறையின் சார்பாகவே அங்கு கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்ற உறுதியைச் சொல்லி, தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்ற கருத்து பரவலாகவே இருந்து வருகிறது. அதே கருத்தைத்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் வலியுறுத்தியதன் காரணத்தினால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, அவர் மூலமாக அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையிலே, 250 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்கு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, 200 இடங்கள் கையகப்படுத்தப்பட்டு, முதல் கட்டமாக 50 சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் நடந்து வருகின்றன. மீதமுள்ள கட்டடங்களைக் கட்டுவதற்குத் தேவையான ஆய்வுப் பணிகள் நடந்து வருகின்றன. சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், எங்கெல்லாம் தனியார் வாடகைக் கட்டடத்திலோ அல்லது அரசு வாடகைக் கட்டடத்திலோ இயங்குகின்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கட்டடங்கள் தேவை என்று தெரிவித்தால், அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கும்பட்சத்தில், அதை எங்களுக்குத் தெரியப்படுத்தினால், அந்தச் சங்கங்களுக்கு பால் வளத் துறையின் மூலமாக உறுதியாக

கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

114—

பேருந்து வசதி

***40917—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வரை இரவு 8–30 மணிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரியிலிருந்து உலகம் கிராமத்திற்கு 2 பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 12 நடைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களிலும் மற்றும் பொது மக்களின் வசதிக்காகவும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு சராசரியாக 50 விழுக்காடே உள்ளதால், தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே, தற்சமயம் வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரி முதல் உலகம் கிராமம் வரை இரவு 8–30 மணிக்கு பேருந்து இயக்கிட இயலாத நிலையுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)